Civil Services (Main)
Examination- 2025

**SLPM-U-TML**

# தமிழ் / TAMIL

## தாள் I / Paper I

## (இலக்கியம்) / ( LITERATURE )

| | |
|---|---|
| கால அளவு : **மூன்று** மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : **250** |
| *Time Allowed : **Three** Hours* | *Maximum Marks : **250*** |

## வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

**வினாக்களுக்கு விடையெழுதும் முன்பாகப் பின்வரும் அறிவுறுத்தல் ஒவ்வொன்றையும் அருள்கூர்ந்து படிக்கவும் :**

மொத்தம் **எட்டு** வினாக்கள் **இரண்டு பிரிவுகளாகப்** பகுக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினாக்கள் **1, 5** ஆகியவை கட்டாயம் விடையளிக்க வேண்டியவை. எஞ்சிய வினாக்களுள் பிரிவு ஒவ்வொன்றிலும் குறைந்தது **ஒரு** வினா தெரிவு செய்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஒரு வினா/பகுதிக்கு உரிய மதிப்பெண் அதற்கு நேரே குறிக்கப்பட்டுள்ளது.

விடைகள் **தமிழில்** எழுதப்பட வேண்டும்.

வினாக்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசைமுறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதியே விடையெழுதப்பட்டிருப்பினும் அது அடிக்கப்பட்ட அவ்வினாவும் விடையளிக்கப்பட்ட வினாவாகக் கணக்கிடப்படும். விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதி தெளிவாக அடிக்கப்பட வேண்டும்.

## QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** question from each section.*

*The number of marks carried by a question/part is indicated against it.*

*Answers must be written in **TAMIL**.*

*Word limit in questions, wherever specified, should be adhered to.*

*Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

## SECTION A

**Q1.** **பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) நீலகிரியில் பேசப்படும் திராவிட மொழிகள் எவை ? விளக்கு. *10*

(b) தமிழ் அற இலக்கியங்கள் – விளக்குக. *10*

(c) சமூகக் கிளைமொழி என்றால் என்ன ? சான்றுகள் தருக. *10*

(d) தமிழில் இனவரைவியல் நாவல்கள் யாவை ? மதிப்பிடுக. *10*

(e) தமிழ் இலக்கிய மரபுகளின் அரசியல் பின்னணி களை மதிப்பிடுக. *10*

**Q2.** **பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) தமிழ் மொழி ஒலியன்கள் மலையாள மொழி ஒலியன்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றன ? ஏன் ? *20*

(b) சிலப்பதிகாரத்தில் நான்கு வருணக் கருத்தியல் உள்ளதா ? ஆராய்க. *15*

(c) நாயகன் – நாயகி பாவம் என்றால் என்ன ? தமிழ் பக்தி இலக்கிய மரபு கொண்டு விளக்கு. *15*

**Q3.** **பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) சங்க இலக்கிய மொழி தற்கால இலக்கிய மொழியிலிருந்து வேறுபடுகிறதா ? விளக்கு. *20*

(b) மணிமேகலைக் காப்பியத்தின் வழி அறியலாகும் தமிழகச் சமயச் சூழல்கள் எவை ? மதிப்பிடு. *15*

(c) தூதுக்குரிய பொருள்கள் எவை ? ஏன் ? விளக்குக. *15*

Q4. **பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) தமிழ் வேற்றுமை உருபுகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கு. *20*

(b) அற இலக்கியங்களின் அடிப்படைக் கருத்தியலை (Ideology) விவரி. *15*

(c) தற்காலத் தமிழ் இலக்கியங்களில் பொதுவுடமைக் கருத்தியலின் தாக்கத்தை விவரிக்க. *15*

## SECTION B

**Q5. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) சமூகவியல்த்திறனாய்வின் கூறுகள் எவை ? விளக்கு. *10*

(b) மெய்ப்பாடு, ரசம் என்ற இரண்டும் ஒன்றா ? விவாதி. *10*

(c) இதழாளர் பெரியார் – நிறுவுக. *10*

(d) நாயக்கர் காலத்தில் தமிழுக்கு இருந்த ஆதரவு எவ்வாறானது ? விளக்கு. *10*

(e) தமிழக மகளிர் போர் மரபுகளில் எவ்வாறு உறவுபடுத்தப்படுகின்றனர் ? *10*

**Q6. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) உளவியல் திறனாய்வின் அடிப்படைகள் எவை ? விளக்கு. *20*

(b) தமிழ்க் கதைப்பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள் குறித்து விளக்குக. *15*

(c) இறப்புச் சடங்குகளில் புலப்டும் சமூக உறவுகள் எவ்வாறானவை ? ஆராய்க. *15*

**Q7. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) இலக்கிய நாட்டுப்புறவியல் என்றால் என்ன ? விளக்குக. *20*

(b) தமிழ்ச் சமூக ஊடகங்களின் போக்குகளை மதிப்பிடு. *15*

(c) தமிழ்ப் பழமொழிகளைச் சமூகவியல் நோக்கில் பாகுபாடு செய்து விளக்குக. *15*

**Q8. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) உவமையை அடிப்படையாகக் சொண்ட இலக்கியக் கோட்பாடுகள் எவை ? எவ்வாறு ? விளக்குக. *20*

(b) சிறுதெய்வங்கள் – பெருந்தெய்வங்கள் வழிபாட்டு முறைகளை வேறுபடுத்திக் காட்டுக. *15*

(c) தமிழில் நிகழ்ந்த மொழிபெயர்ப்பு முயற்சிகளைப் பட்டியலிட்டு விளக்குக. *15*